# தமிழ்ச் சொல்வருகைச்சுட்டி

## *பயனாளர் கையேடு*

© 2021 செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
http://ctlt.cict.in/

# தமிழ்ச் சொல்வருகைச்சுட்டி

## 1. சொல்வருகைச்சுட்டி

சொல்வருகைச்சுட்டி என்பது ஒரு சொல்லானது ஒரு நூலில் எத்தனை முறை, எந்தெந்த அடிகளில், எந்தச் சீராக பயின்று வந்துள்ளது என்பது உட்பட உருவாக்கித் தரக்கூடிய கணினி நிரல்.

### சொல்வருகைச்சுட்டியின் பயன்கள்

- ஒரே சொல்லின் வெவ்வேறு வகையான பயன்பாடுகளை அறிதல்.
- சொற்கள் கையாளப்படும் விதம் அறிதல்.
- ஒரு சொல் ஒரு நூலில் எத்தனை முறை பயின்று வரும் முறையினை அறிதல்.
- சொல்லகராதி, சொற்களஞ்சியங்கள், பொருட்களஞ்சியங்கள், கலைக்களஞ்சியங்கள் தயாரித்தல்.
- இயற்கை மொழி ஆய்வில் கீழ்வரும் மென்பொருள் உருவாக்கத்தில் பயன்படுதல்:
    - ❖ உருபனியல் பகுப்பான்
    - ❖ உருபனியல் உருவாக்கி
    - ❖ இயந்திர மொழிபெயர்ப்பு
    - ❖ சொல்வகைக் குறிப்பான்
    - ❖ மொழிக்கல்வி
    - ❖ தரவக வழிக் கல்வி
    - ❖ தரவக வழி அகராதி
    - ❖ தரவக வழி மொழிபெயர்ப்பு
    - ❖ தேடுபொறி உருவாக்குதல்
    - ❖ சொல்வளத்தைப் பெறுதல்
    - ❖ சங்க இலக்கியங்களுக்கான தரவுத்தளம் உருவாக்குதல்

❖ சொல் திருத்திகளின் பின்புலத் தரவு உருவாக்கத்திற்குப் பயன்படுதல்
❖ உரை ஆய்வு செய்வதற்குத் தரவு உருவாக்கத்திற்கு உதவுதல்

## 2. சொல்வருகைச்சுட்டி - வடிவமைப்பு

சொல்வருகைச்சுட்டிப் பயனாளர்களுக்கு எளிதில் பயன்படும் வகையில் நான்கு **(menu bar)** கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை

- கோப்பு
- கருவிகள்
- உதவி
- வெளியேறு

### ❖ கோப்பு

கோப்பைத் தெரிவு செய்க எனும் குமிழ் பனுவலை **(Text file)** உள்ளீடு செய்வதற்குப் பயன்படுகிறது. ஒருங்குறியில் **(UNICODE)** அமையப்பெற்ற நூலைப் பனுவல் **(*.txt)** வடிவில் உள்ளீடு செய்யலாம். சொற்சூழல் கருவியில் ஒன்றிக்கு மேற்பட்ட நூல்களை **(multi file support)** உள்ளீடு செய்து முடிவுகளைப் பெறும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.

### ❖ கருவிகள்

கருவிகள் எனும் தலைப்பு சொல் இடம், முடிவைப்பெற, கணக்கீடு, தேடு என்னும் நான்கு கூறுகளாக அமைக்கப்பட்டுள்ளது.

### ❖ சொல் இடம்

கோப்பை உள்ளீடு செய்தவுடன் கருவிகள் எனும் குமிழைத் தெரிவு செய்தால் அதில் சொல் இடம், முடிவைப்பெற, கணக்கீடு, தேடு என நான்கு


குமிழ்கள் தோன்றும். இதில் ‘சொல்இடம்’ எனும் குமிழியைச் சொடுக்கினால் திரையில் சொற்களின் பட்டியல், அச்சொல் பயின்று வரும் நிகழ்வெண்கள், விழுக்காடு, சொல்வருகை ஆகியன பெறப்படும்.

இடைமுகத்தில் உள்ள ‘சொல்’ என்னும் பகுதியினைத் ஒரு முறை சொடுக்கினால் அச்சொற்களை அகர வரிசைப்படுத்தவும், மறு முறை சொடுக்கினால் னகரவரிசைப்படுத்தவும் இயலும்.

‘நிகழ்வெண்’ என்னும் தலைப்பைச் சொடுக்கினால் உள்ளீடு செய்யப்பட்ட நூலில் எச்சொல் அதிக எண்ணிக்கையில் இடம்பெற்று இருக்கின்றது என்னும் தகவலைப் பெற இயலும். மறுமுறை சொடுக்கினால் குறைந்த எண்ணிக்கையில் இடம்பெற்று சொற்களின் தகவலைப் பெற இயலும்.

‘விழுக்காடு’ என்னும் பகுதியில் குறிப்பிட்ட அச்சொல் எத்தனை விழுக்காடு இடம் பெற்றுள்ளது என்பதனைப் பெற இயலும். ‘விழுக்காடு’ என்னும் குமிழை ஒருமுறை சொடுக்கினால் உள்ளீடு செய்யப்பட்ட நூலின் குறிப்பிட்ட அச்சொற்கள் அதிக அளவில் **(ascending order)** பயின்று வரும் விழுக்காட்டினையும் மறுமுறை சொடுக்கினால் குறைந்த அளவில் **(descending order)** பயின்று வரும் விழுக்காட்டினையும் பெற இயலும்.

‘சொல்வருகை’ எனும் பகுதியில் குறிப்பிட்ட அச்சொல் இடம் பெறும் நூல், செய்யுள் எண், செய்யுள் அடி இவற்றுடன் குறிப்பிட்ட அச்சொல் எந்தச் சீராக இடம் பெற்றுள்ளது என்ற இக்கருவிக்கே உரிய சிறப்புப் பயனையும் பெற இயலும்.




படம் **1.** சொல்வருகைச்சுட்டி

- ## முடிவைப்பெற


சொல்வருகைச்சுட்டியில் இருந்து பெறப்பட்ட முடிவைப் பனுவலாகத் **(Text file)** தரவிறக்கம் செய்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 'முடிவைப்பெற' எனும் குமிழியைத் தெரிவுசெய்தால் 'கோப்பைத் தெரிவு செய்யவும்' எனும் தலைப்பிட்ட இடைமுகம் தோன்றும். இதில் கோப்பின் பெயரைத் தட்டச்சுச் செய்து சேமி **(save)** எனும் குமிழினைத் தெரிவு செய்தால் சொல்வருகைச்சுட்டியின் மூலம் பெறப்பட்ட முடிவைப் பனுவலாகப் **(Text file)** பெறலாம்.

இதன் முடிவுகளைப் பனுவலாகப் பெறும்போது **(Text file)** நூலின் மொத்த பாடல் எண்ணிக்கையையும், மொத்த சொற்களின் எண்ணிக்கையையும்,

ஒருமுறை மட்டுமே இடம்பெற்றுள்ள சொற்களின் எண்ணிக்கையையும் பெறலாம். சொல்வருகைச்சுட்டியில் தரவினை உருவாக்க எடுத்துக் கொண்ட கால அளவு, அதன் பயனை அளிக்க எடுத்துக்கொண்ட கால அளவு, இவ்விரண்டும் செயல்படும் இடைப்பட்ட கால அளவு ஆகிய தகவல்களையும் தருவதாக இக்கருவி அமைகின்றது.

- **தேடு**

சொல்வருகைச்சுட்டியில் பெறப்பட்ட முடிவில் இருந்து ஒரு குறிப்பிட்ட சொல்லை மட்டும் தேடி அதன் முடிவைப்பெறும் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் தேடு எனும் குமிழைத் தெரிவு செய்தால் ஒரு திரை தோன்றும். இந்த திரையில் சொல், தேடு எனும் இரண்டு குமிழ்கள் இடம் பெற்றுள்ளன. சொல் என்னும் குமிழின் அருகில் கொடுக்கப் பெற்றிருக்கும் உரைப்பெட்டியில் தேடும் சொல்லினை உள்ளீடு செய்தால், அச்சொல், பயின்று வரும் நிகழ்வெண்கள், விழுக்காடு, சொல்வருகை ஆகியன பெறப்படும். இந்தத் திரையிலும் தேடுதலின் நிறைவாகப் பெறும் முடிவினையும் தரவிறக்கம் செய்ய இயலும். ‘வெளியேறு’ என்னும் குமிழினைத் தெரிவு செய்தால் ‘தேடு’ என்னும் பகுதியில் இருந்து மட்டும் வெளியேறலாம்.





படம் 2. சொல்வருகைச்சுட்டி முடிவுகள்

### ▪ தொடர்புக்கு

தொடர்புக்கு எனும் குமிழினைச் சொடுக்கினால் உருவாக்கம் எனும் குமிழ் தோன்றும். இதனைச் தெரிவு செய்தால் இந்தக் கருவியை உருவாக்கிய குழு மற்றும் நிறுவனத் தொடர்பு முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண்களைப் பெறலாம். இந்த மின்னஞ்சல் முகவரியில் பயனாளர்கள் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்யலாம்.

- **வெளியேறு**

வெளியேறு எனும் பட்டியலில் நீக்கு, வெளியேறு என இரண்டு குமிழிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதில் **'நீக்கு'** எனும் குமிழியைத் தெரிவு செய்வதன் மூலம் சொல்வருகைச்சுட்டியின் அனைத்து முடிவுகளையும் நீக்க இயலும். சொல்வருகைச்சுட்டியில் இருந்து வெளியேற **'வெளியேறு'** எனும் குமிழியைத் தெரிவு செய்வதன் மூலம் வெளியேறலாம்.



படம் 3. சொல்வருகைச்சுட்டி முடிவைப் பெற

# தமிழ்ச் சொல்வருகைச்சுட்டி


பதிப்பு 1.0

காப்புரிமை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

உருவாக்கம் மொழித் தொழில்நுட்பப் புலம்



தொடர்புக்கு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
செம்மொழிச் சாலை
பெரும்பாக்கம்
சென்னை – 600 100.
தொலைபேசி : +91 - 44 22540125

மின்னஞ்சல் : dlt@cict.in

இணையம் : https://www.cict.in/

https://twitter.com/CICTOfficial

https://www.instagram.com/cict_chennai/

https://www.facebook.com/chennaicict/

https://www.youtube.com/user/cictarchives